வெளியீடு எண்.33-2016 நாள்: 18.09.2016

**விழுப்புரம் மாவட்ட வருவாய்த்துறையின் சார்பாக 1926 பயனாளிகளுக்கு ரூ.1,31,94,375/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் வழங்கினார்.**

******

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, விழுப்புரம் ஆனந்தா திருமண மண்டபத்தில், விழுப்புரம் வருவாய்த்துறையின் மூலம் 1926 பயனாளிகளுக்கு ரூ.1,31,94,375/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் இன்று (18.09.2016) பயனாளிகளுக்கு வழங்கினார்.

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள், வருவாய்த்துறையின் மூலம் விழுப்புரத்தில் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் கல்வி உதவித்தொகை 359 பயனாளிகளுக்கு ரூ.8,95,750/- மதிப்பீட்டிலும், விபத்து நிவாரண உதவித்தொகை 11 பயனாளிகளுக்கு ரூ.11,27,500/- மதிப்பீட்டிலும், இயற்கை மரண உதவித்தொகை 50 பயனாளிகளுக்கு ரூ.6,25,000/- மதிப்பீட்டிலும், திருமண உதவித்திட்டம் (மகளிர்) 11 பயனாளிகளுக்கு ரூ.1,10,000/- மதிப்பீட்டிலும், திருமண உதவித்திட்டம் (ஆண்கள்) 39 பயனாளிகளுக்கு ரூ.3,12,000/- மதிப்பீட்டிலும், முதியோர் உதவித்தொகை 286 பயனாளிகளுக்கு ரூ.35,34,960/- மதிப்பீட்டிலும், பட்டா மாறுதல் ஆணை 20 பயனாளிகளுக்கும், தோட்டக்கலைத் துறையின் மூலம் பயிர் மானியம் 10 பயனாளிகளுக்கு ரூ.4,81,000/- மதிப்பீட்டிலும், 10 மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு ரூ.40,00,000/- கடனும், வேளாண்மை துறையின் மூலம் உழவு இயந்திரம், கறவை மாடு மற்றும் நெல் நடவு இடுபொருள் என 20 பயனாளிகளுக்கு ரூ.5,41,000/- மதிப்பீட்டிலும், ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் 25 பயனாளிகளுக்கு ரூ.11,47,165/- மதிப்பீட்டிலும், கருணை அடிப்படையில் 16 நபர்களுக்கு பணி நியமன ஆணையினையும், முதலமைச்சரின் சாலை விபத்து நிவாரண நிதி 32 பயனாளிகளுக்கு ரூ.4,20,000/- மதிப்பீட்டிலும், 1023 பயனாளிகளுக்கு குடும்ப அட்டைகளையும், மீன்பிடி விசைப்படகுகளுக்கு அவசரகால எச்சரிக்கை பரப்பும் கருவி 14 நபர்களுக்கு 90 சதவிகித மானியத்திலும் என மொத்தம் 1926 பயனாளிகளுக்கு ரூ.1,31,94,375/- மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி விழா பேருரையாற்றினார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏழை மக்களுக்கென எண்ணற்ற நலத்திட்ட உதவிகளை கடந்த 5 ஆண்டுகாலமாக செய்ததன் பயனாக இரண்டாவது முறையாக மீண்டும் தொடர்ந்து முதலமைச்சராக பதவியேற்றுள்ளார்கள். இதன் தொடர்ச்சியாக இன்று ரூ.1,31,94,375/- மதிப்பீட்டில் 1926 பயனாளிகளுக்கு வருவாய்த்துறையின் மூலம் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

சென்ற 5 ஆண்டுகால ஆட்சியில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் அளித்த, அனைத்து வாக்குறுதிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக கொண்டுவர வேண்டும் என்பதற்காக பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள்.

சமூக பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ், தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தில் வழங்கப்பட்ட 4 கிராம் தங்கத்தினை உயர்த்தி, 8 கிராம் தங்கம் வழங்க, பதவியேற்ற முதல் கையெழுத்திலேயே நடைமுறைப்படுத்தியுள்ளார்கள்.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள், 100 யூனிட் மின்சாரம் இலவசமாக வழங்கியுள்ளார்கள். கடந்த 5 ஆண்டுகால ஆட்சியில் மின்சாரத்துறையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் அதிக கவனம் செலுத்தி, கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தியுள்ளார்கள். எனவே, தமிழகத்தில் தேவையை விட மின்சார உற்பத்தி அதிகரிக்கப்பட்டு, 3,000 மெகாவாட் மின்சாரம் வெளி மாநிலங்களுக்கு விற்கவும் நடவடிக்கை எடுத்துள்ளார்கள். தமிழகம் மின் மிகை மாநிலமாக திகழ்கிறது. மேலும், மின்சார கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மத்திய அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் மாதம் 20 கிலோ அரசி விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக, ரூ.5700 கோடி நிதியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். முதியோர் ஓய்வூதியம் ரூ.500/- லிருந்து ரூ.1000/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. 2011-16ஆம் ஆண்டில் 3 லட்சம் வீடுகள் கட்டித்தரப்படும் என்று தேர்தல் அறிக்கையில் தெரிவித்தவாறு, கடந்த 5 ஆண்டுகளில் 3 லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம், விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும் என்றும், சிறு, குறு விவசாயக் கடன்கள் அனைத்தும் ரத்து செய்யப்படும் என்றும் தேர்தல் அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு, தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் செயல்படுத்திவருகிறார்கள். தகுதிவாய்ந்த அனைவருக்கும் குடும்ப அட்டை வழங்கப்பட்டுள்ளது. இதுபோன்ற நல்ல திட்டங்கள் தொடர்ந்து கிடைக்க, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக்கு மக்கள் என்றென்றும் நன்றிக்கடன் பட்டவர்களாகவும், உறுதுணையாகவும் இருக்க வேண்டுமென மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், பாராளுமன்ற உறுப்பினர் திரு.செஞ்சிசேவல் வெ.ஏழுமலை, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சி.ராஜசேகரன், விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.ஜீனத்பானு, விழுப்புரம் வட்டாட்சியர் திரு.வெற்றிவேல், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் திருமதி.அலமேலுவேலு, திண்டிவனம் நகரமன்றத் தலைவர் திரு.வெங்கடேசன், ஒன்றியக்குழு தலைவர்கள் திருமதி.சுமதி நாகப்பன், திருமதி.விஜயா சுரேஷ்பாபு, திருமதி.ஷர்மிலாநெடுஞ்செழியன், திரு.இளங்கோவன் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.